# குவைத்தின் உணவுத் தேவைக்கு ஸ்ரீலங்கா தேயிலை அனுப்புகிறது

குவைத்தின் உடனடித் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக ஸ்ரீலங்கா அரசு ஒரு தொகுதி தேயிலையை அனுப்பி வைத்துள்ளது இத்தகவலை நேற்று கொழும்பில் வெளியுறவு அமைச்சு வெளியிட்டது. இரண்டாயிரம் கிலோ கிராம் தேயிலைத் தொகுதி எயர் லங்கா விமானம் மூலம் குவைத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், குவைத்தின் புனர்நிர்மாணப் பணியில் இலங்கையும்

— 04ஆம் பக்கம் பார்க்க

# 1992 இல் தான் கனடாவில் வேலை வாய்ப்புக் கிடைக்கும்

கனடாவில் வேலையில்லாப் பிரச்சினை தோன்றியுள்ளதாக அங்கிருந்து வரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது. இதனால் ஒப்பந்த அடிப்படையில் அங்கு பணிபுரியும் இலங்கையர் உட்பட வெளிநாட்டவர்கள் பலர் வேலையை இழக்கும் நிலையில் உள்ளனர். ஆரம்பத்தில் கனடாவுக்குள் சென்றவர்களுக்கு உடனடியாகவே வேலை கிடைக்க வாய்ப்பு இருந்ததாகவும்

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 122 பிரமோதூத பங்குனி 15 ( 29-03-1991 ) வெள்ளி

# விடுமுறைத் தினங்களில் மருந்து எடுக்க முடியாது

யாழ் போதனா வைத்தியசாலையில் ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வெளி நோயாளர் பிரிவுக்கு பொறுப்பான வைத்தியர்கள் நோயாளிகளைப் பார்வையிட்ட போதிலும் மருந்தகப் பொறுப்பாளர்கள் நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்க மறுப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. மாணவர்களும், அரச ஊழியர்களுமே இத்தினங்களில் கூடுதலாக வருவதாகவும்

—04ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பத்திரிகைச் செய்திக்கு மறுப்பு

# ஆயுதம் தாங்கிய புலிகள் யாழ் ஆஸ்பத்திரியில் இல்லை

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை

"யாழ் போதனா வைத்தியசாலையில் காயமடைந்த விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால் ஆயுதம் தரித்த போராளிகள் வைத்தியசாலை வளவில் இருக்கிறார்கள் என்பதில் உண்மையில்லை" என நேற்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பிலுள்ள யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் காயமடைந்த விடுதலைப் புலிப் போராளிகளை ஆயுதம் தாங்கிய போராளிகள் காவல் புரிகிறார்கள் என கொழும்புத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதையடுத்தே செஞ்சிலுவைச் சங்கம் இவ்வறிக்கையை விடுத்தது.

''இலங்கை அரசுடனும் புலிகளுடனும் நவம்பர் 1990 இல் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி யாழ் போதனா வைத்தியசாலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் உள்ளது.

வைத்தியசாலையும் அதைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயமும் இருபகுதியினராலும் மதிக்கப்பட வேண்டுமென்பதும், அங்கு இராணுவ நிலை ஏதும் நிறுவப்படக்கூடாதென்பதும் அவ்வுடன்படிக்கையின் பொருளாகும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வைத்திய செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை ஆனால் இவ்வுடன்படிக்கை மதிக்கப்படுகிறதா என உறுதி செய்வதற்காக எந்நேரமும் ஆஸ்பத்திரியில் இருக்கின்றது.

சமீபகாலங்களில் இவ்வுடன்பாட்டை மீறியதாக எவ்வித முறைப்பாடும் எமக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# அம்பாறையில் 30 விவசாயிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டைப்பாளத்தில் வைத்து 30 தமிழ் விவசாயிகளை முஸ்லிம் ஊர்காவற் படையினர் வெட்டிக் கொலை செய்துள்ள சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

காரைதீவிலிருந்து அறுவடைக்குச் சென்றவர்களே இவ்வாறு படுகொலை செய்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# அகதி முகாம்கள் அமைக்க இந்தியா நிதி வழங்குமாம்

# ரோந்து சென்ற இராணுவம் மீது

## ராஜீவின் கார் மீது பீஹாரில் தாக்குதல்

தேர்தல் பிரசாரத்திற்கு பீஹார் சென்ற ராஜீவ் காந்தியின் கார் நேற்று தாக்கப்பட்டது. ராஜீவ் காந்தியையும், அவரது மகன் ராகுலையும் தாக்க முற்பட்ட போது காங்கிரஸ் ஆதரவாளர்கள் தடுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடாத்தியவர்கள் ஜனதாதள் ஆதரவு கோஷம் எழுப்பியதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

## மட்டு அகதிமுகாம்களில் இராணுவம் புகுந்து தாக்குதல்

மட்டக்களப்பில் அகதி முகாம்களில் உள்ளோரை படையினர் தாக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள அகதி முகாமினுள் பிரவேசித்த இராணுவத்தினர் அங்கிருந்த இளைஞர்களை கடுமையாகத் தாக்கியதாக கூறப்படுகிறது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இளவாலையில் ஷெல் தாக்குதல் ஒருவர் ஸ்தலத்தில் பலி!

கீரிமலையில் நேற்று கடற்படையினர் நடத்திய ஷெல் தாக்குதலினால் ஒருவர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு அருகில் இந்த ஷெல் விழுந்து வெடித்ததால் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த இளையவர் (72 வயது) உயிரிழந்தவராவர். தர்மலிங்கம் பாக்கியவதி காயமடைந்தார்.

இதே வேளை பலாலியிலி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடக் கூடாது

''இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலை ... வர் நெவில் கருணாரட்ன சென்னையில் தெரிவித்துள்ளார்.

கொலை செய்துள்ள சம்பவம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ரோந்து சென்ற ராணுவம் மீது தும்பன்கேணியில் தாக்குதல்

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள வெல்லாவெளி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரும் ரெலோ இயக்கத்தினரும் தேடுதல் வேட்டைக்காக வந்தபோது தும்பன்கேணியில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடந்த புதன்கிழமை இடம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பூந்தோட்டம் கிராமம் இராணுவத்தால் சுற்றிவளைப்பு

வவுனியா பூந்தோட்டத்தில் ஸ்ரீலங்காப் பொலிஸார் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்துப் பூந்தோட்டம் கிராமம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

பூந்தோட்டம் கிராமம் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிலிருப்பதாகப் பொது

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ரயிலில் வரும் தமிழ் இளைஞர்கள் புகையிரத நிலையங்களில் கைது

வடக்கு நோக்கி ரயிலில் வரும் பயணிகளில் தமிழ் இளைஞர்கள் புகையிரத நிலையங்களில் வைத்து கைது செய்து பொலிஸாரால் அழைத்துச் செல்லும் சம்பவங்கள் கடந்த சில தினங்களாக இடம் பெறுகிறது.

சந்தேகத்திற்கிடமானவர்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா நிதி வழங்குமாம்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அகதிமுகாம்களை நிறுவுவதற்கு இந்தியா நிதியுதவி வழங்கவுள்ளதாம்.

முப்பத்திரண்டு மில்லியன் ரூபாவை இதன் பொருட்டு இந்தியா வழங்கவுள்ளதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக செயலர் என். பி. சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த முத

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு புளொட் உறுப்பினர் தற்காலிகமாக நீக்கம்

மட்டக்களப்பு மாவட்ட 'புளொட்' இயக்கப் பொறுப்பாளர் மோகனும் மற்றும் இருவரும் இயக்கத்தில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக 'புளொட்' இயக்க பொறுப்பாளர் மாணிக்கதாசன் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

போரினால் தமிழ் மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகியுள்ள இவ்வேளையில் இவர்கள் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்ததாக அவர் தெரிவித்தார்.

மோகனும், மற்றும் கேசவன் காண்டீபன் ஆகிய இருவரும் விசாரிக்கப்பட்டு வருகிறார்களாம்.

## பரவலாக ஹெலி சூடு

யாழ்குடா நாட்டில் நேற்று நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பல இடங்களில் ஹெலி

— 4 ஆம் பக்கம் பார்க்க

சினையில் இந்தியா தலையிடக் கூடாது. இது எமது உள்வீட்டுப் பிரச்சனை.''

இவ்வாறு மாற்லாகிச் செல்லும் முன்னாள் இந்தியாவுக்கான இலங்கைத் தூது னார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் செயற்படாது போனதற்கு இரு நாட்டு அரசுகளுமே காரணம் எனவும் தெரிவித்தார்.

## வலி வடக்குப் பகுதிகளில் ஹெலி, ஷெல் தாக்குதல்

கீரிமலை, இளவாலை, அம்பனை, அளவெட்டிப் பகுதிகளில் நேற்றுப் பல மணி நேரம் ஹெலிகொப்டர் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதேநேரம் கீரிமலைக் கடலிலிருந்து கடற்படைப் படகுகள் குடிமனைகளை நோக்கி பலத்த பீரங்கி வேட்டுக்களை தீர்த்த வண்ணமிருந்தன.

நேற்று மாலைவரை இடையிடையே ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. கருகம்பனையில் 2 வீடுகள் சேதமடைந்தன. (48, 33)

# கீரிமலையில் கடும் மோதல்

நேற்றுக்காலை 10 05 மணியளவில் கீரிமலை கிருஷ்ணன் கோயில் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் கீரிமலையை நோக்கி முன்னேற முயன்ற போது இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

இதேவேளை படையினர் கீரிமலை வலித்தூண்டல் புனித அன்னம்மாள் தேவாலயம் பகுதியிலும் கடற்படைப் படகிலிருந்து சிறு படகுகளில் தரையிறங்கி நிலை கொண்டுள்ளனர். மோதல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதேவேளை இராணுவத்தினருக்கு உதவியாக கடற்படைப் படகுகள் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன. (48)

# இன்று பெரிய வெள்ளி



சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையிலான ஏழு நாட்களும் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களுக்கு ஆன்மீக அர்த்தம் நிறைந்த அதிமுக்கிய நாட்களாகும்.

இவ்வாரத்தைப் "பரிசுத்த வாரம்" என அழைப்பர். இறைவனின் மகனாகிய இயேசுகிறிஸ்து உலக மக்களைப் பாவத்தின் ஆகரமிப்பில் இருந்து மீட்க இவ்வுலகத்தில் அவதரித்து ஈற்றில் தன் இலட்சிய வெற்றிக்காக தன் உயிரையே கையளித்தார். கிறிஸ்துவின் பிறப்பு கிறிஸ்மஸ் பண்டிகையாகும். அவரது பணி வாழ்வின் இறுதிக்கட்டமான மனித மீட்புக்காக தன் உயிரை அர்ப்பணித்த நிகழ்வுகளே பரிசுத்த வாரத்தில் தியானிக்கப்படுகின்றன.

இந்த வாரம் பல மறைபொருள் உண்மைகளை அர்த்தப்படுத்தும் நிகழ்வுகளை தன்னகத்தே கொண்டது. இவ்வுலக வாழ்வில் புறநானர்களின் பாமரமக்களிடையே பணியாற்றிய இயேசு யூதர்களின் சமய முக்கியத்துவம் வாய்ந்த ஜெருசலேம் நகருக்குள் பாமர, பாட்டாளி மக்கள் புடைசூழ ஆன்மீக அரசனாக நுழைவதை "குருத்தோலை ஞாயிறு" என்ற பெயருடன் கிறிஸ்தவர்கள் சென்ற ஞாயிறு நினைவு கூர்ந்தனர். ஜெருசலேம் நுழைந்த இயேசு தன் சீடர்களோடு தன் மரணத்திற்கு முந்திய தினமான நேற்றைய தினம் (பெரிய வியாழன்) இறுதி இராப்போசனம் உட்கொண்டார். இந்நிகழ்வானது "பாஸ்கா விழா" என எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரவேலயர் விடுதலை பெற்றதை நினைவுகூர ஆண்டு தோறும் கொண்டாடப்படும் விழாவிற்கு புதிய அர்த்தத்தை கொடுக்கிறது. இத்தினத்திலேயே "குருத்துவம்" ஏற்படுத்தப்பட்டதாக கத்தோலிக்க குருக்கள் நினைவு கூருகிறார்கள்.

மேலும் கிறிஸ்து கோதுமை அப்பம், இராட்சை இரசம் என்பன தமது ஊனையும், உதிரத்தையும் பொதிந்திருக்கும் மறைபொருள்களாக அறிக்கையிடுகிறார். இன்று வெள்ளிக்கிழமை இறைமகன் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மனித பாவ மீட்புக்காக தன் உயிரைத் தியாகம் செய்ததை நினைவு கூரப்படுகின்றது. இன்றைய தினத்தை "பெரிய வெள்ளி" என கிறிஸ்தவர் அழைப்பர். இத்தினத்தில் நோன்பு இருந்து மாமிச உணவு, மது போன்றவற்றை கிறிஸ்தவர்கள் தவிர்க்கிறார்கள்.

கிறிஸ்து மரணித்த தினமாக இத்தினம் கருதப்பட்டாலும் இது துக்ககரமான தினமல்ல. ஏனெனில் கிறிஸ்துவின் மரணம் விடுதலைக்கு வித்திட்டது. இத்தினத்தில் இருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்ததாக நினைவு கூரப்படும் நாளை சனிக்கிழமை நள்ளிரவு வரை ஆலயங்களில் மணிகள் ஒலிக்கப்படா. சனி நள்ளிரவுடன் ஆரம்பிக்கும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று சிலுவையில் அறையுண்டு மரணித்த கிறிஸ்து சாவை வென்று, பாவத்தை அழித்து உயிர்த்தெழுந்த நிகழ்வை "உயிர்த்த ஞாயிறு" என கிறிஸ்தவர் கொண்டாடுகிறார்கள். இதுவே "ஈஸ்டர் விழா" அல்லது பாஸ்கா விழாவாகும்.

— தொகுப்பு: சப்ரின் டி. ஏ. எம் குணசிங்கம்

# யாழ் கொக்குவில் வாசிகள் வவு. ராணுவத்தால் கைது

வவுனியா - ஹொறவப்பொத்தான வீதியில் உள்ள மில் ஒன்றில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் மீது சிங்களக் காடையர் கோஷ்டி ஒன்று கற்களை வீசியதாம்.

தமிழர்களும் பதிலுக்குக் கற்களை வீசியபோது அக்கோஷ்டி இராணுவத்திடம் சென்று முறையிட்டதாகவும், இராணுவம் வந்து தமிழர்களைத் தாக்கியதுடன், யாழ். கொக்குவில் வாசிகள் இருவரைக் கைது செய்ததாகவும் ... மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாம். (ப-35)

## சிறு விளம்பரம்

வகுப்பு

S. L. E. A. S. தொடர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 30 3.91. அச்சடித்த பாடக்குறிப்புகளும் மாதிரி வினாவிடைகளும் இலவசம் முழுக்கட்டணம் ...

★ போட்டிப் பரீட்சைக்கான அடிப்படைத்தகைமை தளர்த்தப்பட்டது

# கல்வி நிர்வாக சேவையில் இணைவதற்கு

# 70 சதவீத ஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை மூன்றிற்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகைமைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அறிவித்துள்ளார்.

இதன்படி உச்சவரம்பு 45 வருடங்கள் என்பது நீக்கப்பட்டு வயதுக் கட்டுப்பாடு முற்றாகத் தளர்த்தப்பட்டுள்ளது.

10 வருட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவை தளர்த்தப்பட்டு 5 வருட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையுடைய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

5 வருட பட்டதாரி ஆசிரிய சேவையுடையவர்கள் அல்லது 5 வருட பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் அல்லது 5 வருட சேவையுடைய இராமநாதன் பல்கலைக்கழக கலைத்தலை டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் அல்லது 5 வருட சேவையுடைய தொழில் நுட்பக் கல்லூரி, வர்த்தக டிப்ளோமாப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பங்களை அனுப்பத் தகுதியுடையவர்களாவர்.

அத்துடன் 5 வருடங்களுக்கு குறைந்த பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையுடைய ஆசிரியர் ஒருவர் 10 வருட ஆசிரிய சேவையுடையவர் எனின் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

ஏப்ரில் மாதம் 10ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பலாம் எனவும், போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு விரைவில் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளதாகவும் மகாசிவம் அறிவித்துள்ளார்.

இதனால் எழுபது வீதமான ஆசிரியர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. (66)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 25 — 03 — 1927



உதிர்வு: 28 — 02 — 1991

### திருமதி தெய்வானைப்பிள்ளை இராசையா

அன்பு, பண்பு, பாசத்தை எமக்கெல்லாம் ஊட்டி வளர்த்த எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே! எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய் வழிகாட்டியாய் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டீர்களே அம்மா, உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

30 03 1991 சனிக்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்திக்காக நடைபெறும் கிரியைகளில் பங்கு பற்றி அன்று நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

கரம்பகம்,
மிருசுவில்.

03128

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்:



விண்ணில்

# யாழ் பாடசாலை பண்ணிசைப் போட்டி ஜூன் 19 ஆம் திகதி நடைபெறும்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டி ஜூன் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது (74)

இன்று பங்குனி உத்திரநாள். இந்நாளின் சிறப்பையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

## பங்குனி உத்திரம்

தைபிறந்து வழிபிறந்து, மாசிக்கடலாடி மனமகிழ்ந்து வாழ்ந்தவர்கள், வாழ்வில் மலர்ச்சி கொடுக்கும் வசந்த காலத்தை நோக்கி இருந்தனர். மாசிப்பனி போய பங்குனி மாதம் வசந்தத்தின் வருகைக்கு பறைசாற்றினாற் போல வருகிறது கருப்பவதியான அழகிய பெண் மெதுவாக நடக்கும் நடையில் அருவமாயுள்ள தென்றல் தவழுகிறது. மாமரத்தில், தளிரும் பூவும் நிறைய, குயில்கள் அங்கேயிருந்து வசந்தகாலத்தை வருமாறு கூவுகின்றன. பலவித மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

எல்லாம் வல்ல இறைவனிடம் நீக்கமற நிறைந்துள்ள சக்தி இறைவனோடு சேர்ந்தமையைக் கொண்டாட விரும்பினர். ஒருவனும் ஒருத்தியும் சேரும் நாள் மணவிழா என்றால் இறைவனும் இறைவியும் சேரும் நாள் திருமணவிழாவாகிறது அம்மா. இருந்த சிவத்தை அனுசித்தொழிற்படச் செய்கிறான் சக்தி என்று கருத்துக்கூறி விழா எடுத்தனர். இறைவனுக்குரிய பல்வேறு மூர்த்த பேதங்களுள் கல்யாண சுந்தரமூர்த்தம் என்று கண்டவர் திருக்கல்யாணத்துக்குரிய மங்களகரமான நாள் பங்குனி உத்திர நட்சத்திரம் என்றனர். உலகமெல்லாவற்றையும் ஈன்ற பெருவயிறும் பெருமுலையும் உள்ள பிராட்டியை மணஞ் செய்வதற்கு விழா எடுத்தனர்.

சூரியன் மீனராசியில் நிற்ப சந்திரன் உரோகிணி நட்சத்திரத்தோடு கன்னிராசியில் கலைப் பொலிவோடு தன் கிரணத்தை எமக்குக் கொடுக்கிறது மாசில்வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிளவேனிலும் ...

இராணுவம் வந்து தமிழர்க ளைத் தாக்கியதுடன், வாழ், கொக்குவில் வாலிகன் இருவ ரைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாப் பொலிஸாரிடம் இதுபற்றி முறையிடச் சென்ற போது முறைப்பாட்டை ஏற்க

மம் 30.3.91. அச்சடித்த பாடக்குறிப்புகளும் மாதிரி வினாவிடைகளும் இலவசம் முழுக்கட்டணம் ரூபா 250.00 School of Business Administration, 16, 3வது குறுக்குவீதி, யாழ்ப்பாணம். 03119

யாழ் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி

# பேராசிரியர் அமரர் சோ. கந்தையா அவர்களுக்கு

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் மக்கள் எழுச்சி அடையவும்
இற்றை அவல நிலைமை ஒழியவும்
சொந்த மண்ணின் வளங்கள் கொழிக்கவும்
சோர்வி லாதுநீ ஆற்றிய நற்பணி
நின்று நம்மை உயர்த்தும் - அறிகுவோம்!
நிச்சயம் நீ காட்டிய பாதையில்
சென்று நின்கன வைநன வாக்குவோம்;
சென்றுவா நேர்மைப் பண்பின் சிகரமே!

அமரர் குடும்பத்துக்கும் பல்கலைக்கழக சமூகத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபம்!

— பரி. யோவான் கல்லூரி
பழைய மாணவர்

03129

மண்ணில்: 24 — 11 — 1942



விண்ணில் 01 — 03 — 1991

## திருமதி பரமேஸ்வரி கணபதிப்பிள்ளை

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும், நேசத்தாலும் எம்மை எல்லாம் வழிகாட்டி வாழவைத்த அன்புத்தெய்வமே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டதேன்? அம்மா பிரிவுத் துயரத்தால்நாம் ஏங்கித் தவித்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

31.03.91 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ள அந்தியேட்டிக் கிரியை களிலும், மதிய போசனத்திலும், பங்கு கொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்களை, அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்,

தெணிகாவத்தை
(தம்பசிட்டி)
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

கணவன்:- மு. கணபதிப்பிள்ளை,
பிள்ளைகள், உறவினர்கள்.

03115

சூரியன் மீனராசியில் நிற்ப சந்திரன் உரோகிணி நட்சத் திரத்தோடு கன்னிராசியில் கலைப் பொலிவோடு தன் கிரணத்தை எமக்குக் கொடுக்கிறது மாசிலவீணை யும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிளவேனி லும் மூசுவண்டறை பொய்கையும் என்று திருநாவுக் கரசு நயனார் பாடாமல் என்ன செய்வார். பாடியரு ளினார்.

சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணஞ் செய் தருளினார் என்பது இச் சம்பவங்களின் பொருளாகக் கண்டனர், விழாவெடுத்தனர், திருமணக்கோலஞ் செய்துமகிழ்ந்தனர். திருமணக்கோலத்தை அகத்துக் கண்டு புறத்தேயும் பிறர்க்குக் காட்ட உளா வரச் செய்தனர் கன்னியர், காளையர் கூடி வாழ்தல் நல் லறம் எனக் கண்டனர்.

இறைவன் இறைவியைச் சேர்வதற்கு இமயம் மேற் சென்ற வேளை பங்குனி உத்திரம் என்பதைக் கச்சி யப்ப சிவாசாரியரும் தமது கந்தபுராணத்தில் அருளி யுள்ளார்.

ஆதியின் உலகமெல்லாம் அளித்திடும் அன்னை தன் னைக் காதலின் வதுவை செய்யக் கருதினை கணித நூலோர் ஓதுபங் குனியின் திங்கள் உத்திரம் இன்றே யாகும். ஈது நன் முகூர்த்தம் எந்தாய் இமயமேல் வருதி என்றான்.

பங்குனி மாதத்தின் மற்றொரு சிறப்பு ஆடவருக்கும், அரிவையருக்கும் காதல் உண்டாக்கும் காமன் என்னும் மன்மதனின் விழாவுமாகும். காமன் பண்டிகை என வழங்கும் அது இந்தப் பங்குனி மாதத்திலேயே நிகழு வதாகும். ஐந்து மலர்களை அம்பாக எய்து அருவமாய் நிலவும் அவனைப் பற்றிச் சிந்தாமணி என்னும் சிறந்த காப்பியம் பாடுகிறது. ''ஐங்கணைக் கிழவன் வைகிப் பாசறை பரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம்'' என்பது பாடல்.

- க. சி. குலரத்தினம்

## பிரபாகரன் ஒரு சிறந்த தலைவர்

### பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பகிரங்கப்பாராட்டு



'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் எமக்கும் இடையே கொள்கைகளில் கருத்து வேறுபாடுகள் பல இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவர் ஒரு சிறந்த தலைவராக விளங்குகிறார் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதனால் அவர் மீது எனக்கு ஒரு தனி மதிப்புண்டு'

இவ்வாறு ஆளும் கட்சி முக்கிய பிரமுகர்களில் ஒருவரும், சிங்கள திரைப்படத் துறையின் முன்னணி நடிகரும், பாராளுமன்ற பிரதி சபாநாயகருமான காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே காமினி பொன்சேகா தலைவர் பிரபாகரனை இவ்வாறு பகிரங்கமாகப் பாராட்டினார்.

## வன்னிப் பகுதி பாடசாலைகளுக்கு

## 5000 புதிய ஆசிரியர் நியமனமாவர்!

வன்னி மாவட்டத்திற்கென புதிதாக ஐயாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்த ஆசிரிய நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்பொழுது வன்னி மாவட்டத்தில் பெருமளவு ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களுக்கே புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சு விரைவில் இந்த ஆசிரிய நியமனங்களுக்கான விண்ணப்பங்களைக் கோரவுள்ளது.

### பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் விழா

பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நாளை சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

"ஞானமூர்த்தி—பஞ்சமூர்த்தி சகோதரர்களின மங்கள இசையுடன் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இவ் விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் ஆய்வுரை, இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமண்டபம் உட்பட பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### இன்று தமிழ்சாகித்திய விழா ஆரம்பம்; தமிழ் நூல்கள் யானையில் பவனி வரும்

இன்று கண்டியில் ஆரம்பமாகும் சாகித்திய மண்டல விழாவின்போது பழந்தமிழ் நூல்கள் ஐந்து, யானைகளில் வைக்கப்பட்டு விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தில் இருந்து இந் நூல்கள் ஊர்வலமாக விழா நடைபெறும் கண்டித் திருத்துவக் கல்லூரிக்கு எடுத்து வரப்படும் எனவும் தெரிகின்றது. அன்றுகாலை இக் கல்லூரியில் புத்தகக் கண்காட்சியும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்து வருட காலத்திற்குப் பின் நடைபெறும் தமிழ் சாகித்திய விழா 31 ஆம் திகதி வரை இடம் பெறும்.

(ப 10)

### ஒலிம்பிக் போட்டிகளிற் கலந்துகொள்ள தென்னாபிரிக்காவுக்கு அனுமதி

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தென் ஆபிரிக்காவிற்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன ஒதுக்கலை முற்றிலுமாக அகற்றிவிட்டு வெள்ளையர் அல்லது வெள்ளையரல்லாத விளையாட்டுக் கழகங்களின் ஒருங்கிணைப்பைப் பேணவேண்டுமென்ற நிபந்தனையே தென்னாபிரிக்க அரசிற்குச் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியினால் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனையை நிறைவேற்ற ஆறு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இனப்பாகுபாடு காரணமாக கடந்த பல வருடங்களாக தென்னாபிரிக்கா ஒலிம்பிக் போட்டிகளிற் கலந்துகொள்ளாது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### அகதிகளாகச்சென்றோர் தமிழகத்தில் அவதி

### இந்திய அரசின் உதவி போதாதாம்

இலங்கையிலிருந்து புகலிடம் தேடி இந்தியா சென்றுள்ள அகதிகளின்நிலை அகதி முகாம்களில் மோசமாக உள்ளதாக இராமேஸ்வரத்திலுள்ள 80 அகதி முகாம்களின் இணைப்பாளரான அருட்திரு சின்னப்பன் அமலராஜ் தெரிவித்துள்ளார்.

'டிசம்பர் நடுப்பகுதியில் சுமார் இரண்டு லட்சம் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வந்திருந்தனர்'

'இந்திய அரசு அவர்களுக்கு அளிக்கும் உதவிகள் போதா. மிகுந்த துன்பப்பட்டு கடல் கடந்துவரும் தமிழ் அகதிகளை இந்திய கடத்தல்காரர்கள் வஞ்சித்து அவர்களிடமுள்ள பொருட்களை அற்ப விலைக்கு வாங்க முயல்கின்றனர்' எனவும் தமிழகத்தைச் சேர்ந்த பிதா அமலராஜ் தெரிவித்துள்ளார். (16)

### நிருவாக சேவைப் பரீட்சையில் தேர்வான 91 பேருக்கு கொழும்பில் நேர்முகப்பரீட்சை

வடகிழக்கு பகுதிகளில் உள்ள நிருவாக சேவை வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெறவுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாண சபையினால் ஏற்கனவே நடத்தப்பட்ட நிருவாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 91 பேரே இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

### பங்குனிஉத்தர சங்காபிஷேகம்

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு சிவகாமி அம்பாள் திருக்கோவிலில் இன்று வெள்ளி காலை 9 மணிக்கு அம்பாளுக்கு அட்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு மாகேஸ்வர பூசையும் மூன்று மணிக்கு மணவாளக்கோல

### வலி- வடக்கு உதவி அரச அதிபர் பகுதி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்

வலி- வடக்கு உதவி அர

மயிலிட்டி, பலாலி, கட்

## சித்த வைத்தியத்தை இந்து மருத்துவம் என அழைக்கலாம்!

### - டொக்டர் எஸ். பவானி

கைதடியில் யாழ் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறையில் இடம் பெற்ற கருத்தரங்கில் சித்தவைத்தியத்துறைத் தலைவர் டொக்டர் எஸ். பவானி அவர்கள் வழங்கிய கருத்துக்களைக் கேட்டபோது மேலும் பலவிடயங்கள் பற்றி அவரிடம் விளக்கம் கேட்கவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. கருத்தரங்கு முடிந்த கையோடு எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். களைப்போ சலிப்போ இன்றி மலர்ந்த முகத்துடன் உற்சாகமாக நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தார் பவானி.

★ கேள்வி: இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சித்த வைத்தியத்துறை பரம்பரையாக நிலைத்து வந்தது. பலநோயாளர்களுடன் பழகும் வாய்ப்பினைப் பெற்றுச் சிகிச்சை முறைகளைச் செயல் மூலம் கற்றதனால் பரம்பரைச் சித்த வைத்தியர்கள் சிறப்பாகச் சேவையாற்றினர். சித்த வைத்தியக் கல்லூரியில் கற்று இதே அறிவையும், அனுபவத்தையும் பெற்றுச் சிறப்பாக சேவையாற்ற முடியுமா?

— பதில்: இந்தக்கேள்வி எனக்கு வியப்பைத்தருவதாகவும் எனது துறையையும் மாணவர்களையும் பற்றிய தவறான கணிப்பீடாகவும் படுகிறது. பல்கலைக்கழகத்தின் நோக்கம்" மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பதாகும். எமது மாணவர்களுக்கு மருந்து செய்முறை, நோயாளியைப் பரிசோதிப்பது, மருந்தை நோயாளியில் பிரயோகிப்பது மற்றும் சிகிச்சை முறைகள் பற்றிப் பூரணமாகப் போதிக்கப்படுகின்றது. ஆகவே, அவர்கள் அந்த அறிவையும், தமது முயற்சியையும் பயன்படுத்துவதனால் அவர்கள் வைத்தியத் தொழிலைச் சிறப்பாகச் செய்யலாம் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் சில விடயங்கள் அனுபவ வாயிலாக அறியப்படவேண்டியவை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்தத்துறையிலே 5, 6, வருடங்கள் அவர்கள் பெறும் அனுபவம் ஒருபரம்பரை வைத்தியரின் அனுபவத்திற்கு ஈடாகாமல் இருக்கலாம் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை ஆனாலும் எமது பட்டதாரிகளும் சிகிச்சை புரியும் போதும் மருந்துகள் தயாரிக்கும் போதும், வேண்டிய அனுபவத்தையும் ஆற்றலையும் அடைந்து விடுவார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை மேலும் நவீன உத்திகள் பலவற்றைக் கையாளும் வாய்ப்பு இவர்களுக்குண்டு என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

★ கே: மிகவும் தெளிவான விளக்கம் தந்திருக்கிறீர்கள் நன்றி. யாழ்ப்பாணத்தில், 50 வருடங்களுக்கு முன்பு சித்த வைத்தியம் மிகவும் பிரபலமாக இருந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக மக்கள் ஆங்கில மருந்துகளையே நாடுகிறார்கள் இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

— ப: சித்தமருத்துவம் அல்லது தமிழ் மருத்துவத்தினால் தீர்க்கப்படக்கூடிய நோய்கள் உள்ளன. ஆங்கில மருத்துவம் யூனானி மருத்துவம் ஆகியவற்றினால் தீர்க்கப்படக்கூடிய நோய்களும் உள்ளன. சித்த மருந்துச் சிகிச்சையினால் பயன்பெறுபவர்கள் இன்று இருக்கிறார்கள் என்றால் அது சித்த மருத்துவம் இன்னும் எமது மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளதென்பதே பொருள் சித்த மருத்துவத்துறைக்கான ஆதரவு அரசிடமிருந்து வருவது குறைவு சித்த மருந்துகள் தயாரிப்பதற்குத் தேவையான சில முக்கிய மூலிகைகளை அரசு இறக்குமதி செய்யாமையும், சித்த மருத்துவ முறை பிரபல்யமடையாததற்கு முக்கிய காரணியாகும். ஆனால் இந்த நிலை விரைவில் மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. யாழ் பல்கலைக்கழகம், யாழ் அரசாங்க அதிபர் மற்றும் அபிமானிகள் இந்த மூலிகைகளைத் தருவிக்க வழிவகைகளை எடுத்து வருகின்றனர். உங்கள் காலத்திலேயே இந்த மருத்துவச் சிறப்பை உணரும் நிலை விரைவில் ஏற்படும்.

★ கே: தற்போது எல்லோர் வீட்டிலும் பனடோல் இருக்கி

வலி- வடக்கு உதவி அரசாங்க அதிபர் பகுதியை இரு பிரிவாக அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளைத் தற்போதைய வலி- வடக்கு உதவி அரசாங்க அதிபரும் விசேட ஆணையாளருமான க. நடராசா மேற்கொண்டு வருகின்றார்.

வலிகாமம் வடமேற்கு, வடகிழக்கு என இரு பிரிவுகளாக இதனை அமைக்க இப் பிரதேசத்தில் உள்ள பொது நிறுவனங்களினதும், சனசமூக நிலையங்களினதும் அபிப்பிராயங்களைத் திரட்டுவதில் இவர் முனைந்துள்ளார்.

மயிலிட்டி, பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, தெல்லிப்பழை, அளவெட்டி, இளவாலை ஆகிய இடங்களே இவ்வாறு இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட உள்ளவைகளாகும். (ப-10)

## பயிலுநர்கூட்டம்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம்பெறும்.

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

...மும், நான்கு மணிக்கு திருவிளக்குப்பூசையும், இடம்பெறும்.

## பயிர்களின் இடையே கஞ்சா வடமராட்சி கிழக்கில் அகப்பட்டது

வடமராட்சி கிழக்கில் கஞ்சாப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டவர்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயிர்களுக்கு இடையே இவர்கள் கஞ்சாப்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (43)

## இல. வங்கியில் சேமிப்புச் சான்றிதழ்

எதிர்வரும் சித்திரைப் புதுவருடப்பண்டிகையை முன்னிட்டு யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக்கிளையில் சேமிப்புச் சான்றிதழ்களை விசேட வட்டிவீதத்துடன் பெற்றுக் கொள்ளலாம் என வங்கி அறிவித்துள்ளது.

இவ் விசேட சலுகை சித்திரை 30 ஆம் திகதிவரை உரியமுறையில் வழங்கப்படுமெனவும் வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ப11)

## கடற்படையினரின் கெடுபிடிகள் அதிகரிப்பு;

## வடமராட்சியில் 20,000 மீனவக்குடும்பங்கள் பாதிப்பு!

கடற்படையினரின் கெடுபிடி அதிகரிப்புக் காரணமாக வடமராட்சி, வடமராட்சிகிழக்கு பகுதிகளிலுள்ள சுமார் இருபதாயிரம் கடற்தொழிலாளர் குடும்பங்கள் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளன.

கரைப் பகுதியில் தொழிலை மேற்கொண்டு வந்த சில கடற்தொழிலாளர்களும் அண்மைக் காலங்களில் கடற்படையினரின் கெடுபிடி காரணமாக தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

தொண்டமானாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையுள்ள கரையோரப் பகுதியில் கடற்படையினரின் அட்டகாசங்கள் மீண்டும் அதிகரித்துள்ளது. இதனால் கரையோரக் கிராமங்கள் பெரிதும் பாதிப்புற்றுள்ளன. (43)

★ கே: தற்போது எல்லோர் வீட்டிலும் [illegible] இருக்கின்றது. தலையிடிக்கும் காய்ச்சலுக்கும் துரித நிவாரணி இது போன்று சித்த வைத்தியத்தில் உடன் நிவாரணம் அளிக்க வல்லது ஏதும் இருக்கின்றதா?

— ப: சித்தவைத்தியத்தில் எதுவும் இல்லாமல் இல்லை. தலைவலி காய்ச்சலுக்குக் கொத்தமல்லி, இஞ்சி, மரமஞ்சள், கடுகுரோகணி, பற்படாகம் போன்றவற்றைக் குடிநீர் செய்து சின்னச் சிகப்பு மாத்திரை இரண்டுடன் அல்லது சிறிய புன்னைவேர்க்குளிகை இரண்டுடன் உட்கொண்டால் உடனடி நிவாரணம் கிடைக்கும். இந்தத் தயாரிப்புக்கள் இப்பொழுது சித்த மருத்துவத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மருந்துகளை இந்த மாத முடிவிற்குள் யாழ் பல்கலைக்கழகம் சந்தைப்படுத்த உள்ளது. அதே நேரம் காய்ச்சல், தலைவலி ஆகியன வேறு ரோகங்களின் குறிகளாக ஏற்படலாம். எனவே ரோக நிர்ணயம் செய்வது வைத்தியனின் பாரிய பொறுப்பாகும். சரியான ரோக நிர்ணயம் இல்லையேல் சிகிச்சையில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

★ கே: இப்போது அநேகம் பேர் தங்களுக்குத் தாங்களே சிகிச்சை செய்கிறார்கள். பனடோல், டிஸ்பிறின், அஸ்பிறின் மட்டுமின்றி ரெற்றாசைக்கிளின், அம்பிசிலின், எத்றோமைசின் ஆகியவற்றை வைத்திய ஆலோசனையின்றிப் பாவிக்கிறார்கள். இதனால் விபரீதங்களும் ஏற்படுகின்றன. போர்க்காலச்சூழ்நிலையில் ஏற்புமருந்து மிக அவசியம். அதற்கு இப்போது தட்டுப்பாடு நிலவுகிறது. சித்த வைத்தியத்தில் இதற்கு மாற்று மருந்து உண்டா?

— ப: சித்த வைத்தியத்தில் இதற்கு மாற்று மருந்து இல்லையெனக் கூற எனக்குத் துணிவு இல்லை ஆனால், அதற்கான அவசியம் ஏற்படும்போது, அதைக்கான வேண்டியபணி எங்களுக்கு இருக்கின்றது. காலம் சற்றுத் தாமதமாகலாம்.

(தொடரும்)

# டென்மார்க் ஊடாக நோர்வே சென்ற இலங்கைத் தமிழரை நாடுகடத்த உத்தரவு

மூன்று இலங்கைத் தமிழர்களை சட்டவிரோதமாக நோர்வே நாட்டினுள் அழைத்துச்செல்ல முயன்ற இரு தமிழர்களுக்கு நோர்வேயில் மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நோர்வேயின் புதிய குடிவரவு குடியகல்வு சட்டம் அமுலுக்கு வந்தபின் நீதிமன்றத்தால் வெளிநாட்டவர் தண்டிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

டென்மார்க்கில் இருந்து போலி பயணப்பத்திரங்களுடன் இவர்கள் ஸ்வீடன் ஊடாகவே நோர்வே எல்லையைத் தாண்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று தமிழர்களும் ஸ்ரீலங்காவில் உள்ள ஒரு ஏஜன்சியிடம் ஆளுக்கு இரண்டு லட்சம் செலுத்தி ஜேர்மன் டென்மார்க் ஊடாக நோர்வே நாட்டுக்குள் நுழைந்ததாகவும் இதற்கு இந்த இருவரும் உதவியதாகவும் தெரிகிறது.

வழக்கு விசாரணையின் போது தாம் காணி நகைகளை ஈடுவைத்து முகவர்களுக்கு பணம் செலுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர்.

சிறைத்தண்டனை அனுபவித்த பின்னர் இவர்கள் ஜேர்மனிக்கு நாடுகடத்தப்படுவார்கள் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

### விவசாய உற்பத்திக்கான

## அமெரிக்க அரசின் உதவியை சரியாகப் பயன்படுத்தவில்லை

யாழ் மாவட்ட சிறுபயிர்ச் செய்கையாளர்களுக்கான அமெரிக்காவின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருட்களை சிலர் உரிய முறையில் பயன்படுத்தவில்லை எனத் தெரிய வருகின்றது.

கௌபீ, பயறு, உழுந்து போன்ற தானிய வகைகளை வலிகாமம் பகுதியிலுள்ள சிலர் வாழைத் தோட்டங்களில் வாழைப் பாத்திகளுக்கிடையிலேயே விதைத்துள்ளமையால் குறிப்பிட்ட பயனை அடைய முடியுமா என விவசாயிகள் வட்டாரங்களில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மூலம் வாழைத் தோட்டங்களுக்கு நீர் இறைக்கவும் போடப்படும் பசளை வகைகள் வாழைகளுக்கு உரமாக இருக்கும் என்ற யுத்தியைப் பயன்படுத்தியே இவ்வாறு சிறுதானியங்களை விதைத்துள்ளதாகவும் பேசப்படுகின்றது. (66)

## சிங்கப்பூர், பர்மா, மலேசியா பென்சன் வவுச்சர்கள்

சிங்கப்பூர், பர்மா, மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து ஒய்வூதியம் பெறுபவர்களின் மார்ச் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் காசோலைகள் ஆகியவை அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த வவுச்சர்களை வங்கிகளில் பெற்று தமது கணக்குகளில் வைப்பிலிடலாம் எனச் செயலக பிரதம கணக்காளர் தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படாத வவுச்சர்கள் வங்கிகளினால் செயலகத்திற்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதால் ஒய்வூதியர்கள் வீண் அலைச்சலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (66)

## 200 ரூபா 300 ரூபா நிலுவை பென்சன் வவுச்சரில் இடப்படும்

1991 ஆம் ஆண்டு ஜனவரி ஒய்வூதியத்துடன் சேர்க்கப்பட்ட 1990 கார்த்திகையில் இருந்து அதிகரிக்கப்பட்ட 200 ரூபா 300 ரூபா ஆகிய நிலுவைகள் சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளனவா என்பதை ஒய்வூதியக்கிளை தற்போது பரிசீலனை செய்து வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஒய்வூதியரினதும் வவுச்சர்களும் சரிபார்க்கப்பட்டு தவறுகள் ஏதும் இருப்பின் இவை வைகாசி மாத பென்சன் வவுச்சரில் சீர் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காகச் செயலகம் வரத்தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## முல்லை கிராமப் புறங்களில் கால் நடைகளுக்கு நோய்

முல்லைத்தீவில் கால் நடைகளுக்கு ஒருவித புது நோய் ஏற்பட்டிருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் கால் நடைகளுக்கு ஏற்பட்ட இத்தகைய நோயினால் விலையுயர்ந்த நல்ல இன கறவைப் பசுக்கள் அதிகமாக இறக்கின்றன.

கூடுதலாக கிராமப் புறப் பகுதிகளிலேயே இத்தகைய நோய் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. (38)

## பத்து மாதகாலமாக முல்லைத்தீவில் உணவு தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவுப் பற்றாக்குறையால் மக்கள் பெரிதும் பாதிக்

சிறுவர்களுக்கான பால்மா வகைகள் இல்லாததினால் தாய்மார்களும் குழந்தைக

## மண்ணெண்ணெய் விலை குடாநாட்டில் சரிகிறது

யாழ் குடா நாட்டில் மண்ணெண்ணெய் விலை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. கள்ளச் சந்தையில் ஒரு லீற்றர் 90 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டுவந்த மண்ணெண்ணெய் தற்பொழுது ஒரு லீற்றர் ஐம்பது ரூபா வரை இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இரண்டொரு தினங்களில் விலை மேலும் வீழ்ச்சியடையலாமென வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பெருமளவு மண்ணெண்ணெய் லொறிகளில் இங்கு வருவதாகவும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

## மூன்று நாள் மட்டுமே யுத்த நிறுத்தமாம்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக மூன்று நாள் யுத்த நிறுத்தமே மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று மாலை தெரிவித்தார்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என மீண்டும் அவர் குற்றஞ் சாட்டினார்.

### அகதி...

லாம் கட்ட நிதியுதவி ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் மூலமாக ஸ்ரீலங்கா அரசிடம் வழங்கப்படவுள்ளது.

### பரவலாக—

கொப்டர் சரமாரியாகச் சுட்டது.

கோப்பாய், கைதடிப் பகுதி வெளிகளில் நேற்று பிற்பகல் ஹெலி சரமாரியாகச் சுட்டுச் சென்றது. (33)

### அம்பாறையில்—

யப்பட்டனர்

தம்பிலுவிலிருந்து அக்கரைப்பற்றுக்கு சென்ற தமிழ் மாணவிகள் ஆறுபேர் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்களுடன் சென்ற நான்கு மாணவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

### குவைத்தின்...

உதவுவதை காட்டவே தந்தே இவ் அன்பளிப்பு எனவும் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

இவ்விடையே குவைத்திற்

## தேங்காய் விலை வீழ்ச்சி

யாழ் மாவட்டத்தில் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

யாழ் மாவட்ட சந்தைகளுக்கு அதிகளவு தேங்காய்கள் வந்ததனாலே இவ்விலை குறைவடைந்து வருகிறது. தற்போது 10 முதல் 12 ரூபா வரை விற்கப்படுகிறது.

மேலும் விலை குறைவடையலாம் என வியாபாரிகள் தெரிவித்தனர். (74

### மட்டு...

இந்த முகாமிற்கு வெளியே இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் மின் இணைப்பு வயர் அறுந்து வீழ்ந்ததில் மட்டக்களப்பு புதுக்குடியைச் சேர்ந்த இளங்குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். (74)

### ரயிலில்...

வருபவர்களும் அனுராதபுரம் வவுனியாவுக்கு இடைப்பட்ட

## இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை

காங்கேசன் துறை கொத்தணியைச் சேர்ந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் புதிதாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பின்வரும் பரீட்சை நிலையங்களுக்கு 30ஆம் திகதி காலை 7 மணிக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மல்லாகம் ம. வித்தியாலயத்தில் நடேஸ்வரா க. வி, காங்கேசன் ம. வி., காங்கேசன் றோ. க. வி. மாணவர்கள்.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் - மயிலிட்டி வடக்கு கலைமகள் ம. வி, தையிட்டி சிவகுருநாதர் வி, தையிட்டி கணேச வி, ஊரணி க. வி. மாணவர்கள்.

பண்டத்தரிப்பு யசிந்தா வித்தியாலயத்தில் - மயிலிட்டி றோ. க. வி., பலாலி வடக்கு அ. த. க. பாடசாலை பலாலி சித்தி விநாயகர் வி., மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். (33)

## ரயில்வே பாதுகாப்பு ஊழியரும் தமிழ்ப்பயணிகள் மீது சோதனை

கொழும்பிலிருந்து வரும் பயணிகள் மீது படையினரின் கெடுபிடிகள் ஒருபுறம் இருக்க ரயில்வே பாதுகாப்பு ஊழியரின் கெடுபிடி கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா வரையும் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது அனுராதபுரத்திற்கு அப்பால் வைத்து பயணிகளை இவர்கள் சோதனையிடுகின்றனராம்.

இவர்களில் சிலர் பயணிகள் கொண்டு வரும் முக்கிய பொருட்களை வெளியே வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## மே 11 இல் உள்ளூராட்சி தேர்தல்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்கள் மே மாதம் 11ம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா நேற்று மாலை அறிவித்தார். கடுகன்னாவை தொகுதிக்கு ஐ. தே. க. உறுப்பினர் ஒருவர் போட்டியின்றி தெரிவாகியுள்ளார்.

## வெரித்தாஸில் தந்தை செல்வா நிகழ்ச்சி

தந்தை செல்வநாயகத்தின் 94 ஆவது ஜனன தினத்தை

## மாணவர் ஒன்று கூடல்

முத்தமிழ் விழாவிற்கு தொண்டர்களாக பெயர் கொடுத்த வலிகாம பகுதி மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவரும் இன்று காலை 10-00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சமூகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (71)

## முல்லைத்தீவில் அன்னை பூபதி

...தல் உணவுப் பற்றாக்குறையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பத்து மாதங்களாக சீரான உணவு விநியோகம் ஏற்படாமையால் இம்மாவட்டவெளிமாட்ட அகதிகள் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

...வகைகள் இல்லாததினால் தாய்மார்களும் குழந்தைகளும் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். இந்நிலை தொடருமானால் இவர்கள் இரத்தச்சோகை நோய்க்குள்ளாக்கப்பட்டு பெரும் அன்பத்தை அடைய நேரிடலாமென அஞ்சப்படுகிறது. (38

மத்திய வங்கி அறிவிப்பு

## எச் .பீ. ரி. நீதிக்கமபனியை புனரமைக்க முடியாது

முறிந்த நிதிக்கம்பனியான (எச், பீ. ரி.) புனரமைப்பதற்கு மத்திய வங்கி எடுத்த முயற்சிகள் பலனளிக்காததால் 3500 வாடிக்கையாளர்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

பங்குகளை வாங்கும்படி வாடிக்கையாளர்களுக்கு மத்திய வங்கி அளித்த ஆலோசனையை பெரும்பாலான வாடிக்கையாளர்கள் ஏற்கவில்லை.

இக்கம்பனி மீது தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் நடவடிக்கைகளை மத்திய வங்கி கடந்த ஆண்டு அக்டோபரில் இடைநிறுத்தம் செய்ததும் அதன் இயக்குநர் ஒருவரின் பாஸ்போட் குடிவரவு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டதும் தெரிந்ததே.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ்) (பிறைவேட், லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு பசு வீதி) லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 29 - 03 -1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

...வித்தது.

இதனிடையே குவைத்தில் மீண்டும் ஸ்ரீலங்கா தூதுவராலயம் ஒன்று திறக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### விடுமுறை...

மருந்தகப் பொறுப்பாளர்களின் இந்த செயலால் பாதிப்புறுவதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 150க்கு மேற்பட்ட நோயாளிகளை வைத்தியர்கள் பார்வையிட்ட போதிலும் 100நோயாளர்கள் மட்டுமே மருந்துஎடுத்ததாகவும் மற்றவர்கள் எடுக்க முடியாமல் மருந்தக கதவு மூடப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (74)

### 1992இல் தான்

தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கையில் இருந்து செல்பவர்கள் அகதிகளாக வைக்கப்பட்டு செலவுக்கு 500 டொலர் மட்டும் கனடா அரசினால் வழங்கப்படுகிறது.

1992 ஆம் ஆண்டளவில் வேலை வாய்ப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது (38)

...வருபவர்களும் அனுராதபுரம் வவுனியாவுக்கு இடைப்பட்ட புகையிரத நிலையங்களில் வைத்து கைது செய்யப்படுவதாகவும் பல இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர். 38

### பூந்தோட்டம்—

மக்கள் வெளியேற முடியாது சிக்கியுள்ளனர்

பூந்தோட்டத்திற்குச் செல்வதற்கும், வெளியே வருவதற்கும் இராணுவத்தினரின் அனுமதிபெற வேண்டும் (36)

### ரோந்து...

பெற்ற இத்தாக்குதலின் சேதவிவரம் தெரியவில்லை. படையினர் பின்வாங்கிச் சென்றதாகவும் இரு தமிழ்ச் சகோதரிகள் கொல்லப்பட்டதாகவும், தகப்பனார் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

### இளவாலையில்.,.

ருந்து இளவாலை, கொல்லங்கலட்டி, சேருகம்பாணை, மயிலங்கூடல் போன்ற பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. (48, 83)

தந்தை செல்வநாயகத்தின் 94 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு கடந்த வியாழன் இரவு வெரித்தாஸ் வானொலி விசேட நிகழ்ச்சியை ஒலிபரப்பியது நாதஸ்வர இசையுடன் இது நடைபெற்றது.

## முல்லைத்தீவில் ஊரடங்கு நீக்கம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் முதல் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு தொடர்கிறது.

## வன்னியிலும் அஞ்சலி

மன்னார் இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த மாவீரர்களுக்கு வன்னியிலும் துக்கதினம் கொண்டாடப்பட்டது.

வீதிகள் சந்திகளில் கறுப்புக் கொடிகள் தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. எங்கும் சோககீதமும் புரட்சிப் பாடல்களும் இசைத்தன. (38)

## முல்லைத்தீவில் அன்னை பூபதி நினைவுதினம்

முல்லைத்தீவில் அன்னை பூபதியின் நினைவையொட்டி பல ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவரது நினைவுபடுத்து எதிர்வரும் 12 ஆம் திகதி கதை, கட்டுரை, கவிதைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (38)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினரால் யாழ்ப்பாணக் கோட்டத்திற்குட்பட்ட (நல்லூர், யாழ் உ. அ. அ. பிரிவு) பயிலுநர் ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் ஓராண்டு நிறைவு விழாவும் இன்று காலை 8 30மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.